## காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

வகுப்பு 12 பதிவெண் [ ][ ][ ][ ][ ][ ]

**PART - III - வரலாறு**

நேரம்: 2.30 மணி மொத்த மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு: **20×1=20**

**i)** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**ii)** கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?
அ) 1915 ஆ) 1916 இ) 1917 ஈ) 1918

2) பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.
அ) பாலகங்காதர திலகர் - 1. இந்தியாவின் குரல்
ஆ) தாதாபாய் நௌரோஜி - 2. மெட்ராஸ் டைம்ஸ்
இ) மெக்காலே - 3. கேசரி
ஈ) வில்லியம் டிக்பை - 4. இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்
அ) 2 4 1 3 ஆ) 3 1 4 2 இ) 1 3 2 4 ஈ) 4 2 3 1

3) பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்தமடம்
ஆ) G. சுப்ரமணியம் - விடிவெள்ளிக்கழகம்
இ) மிண்டோ பிரபு - பல்கலைக்கழகச் சட்டம் 1904
ஈ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

4) கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியவர்
அ) புலின் பிஹாரி தாஸ்
ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ
இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ்
ஈ) குதிரம் போஷ் மற்றும் பிரஃபுல்லா சாக்கி

5) 1916 ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம்
அ) முஸ்லீம் லீக் எழுச்சி
ஆ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தற்காலிக இணைப்பு
இ) முஸ்லிம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை க்ாங்கிரஸ் ஏற்றுக்கொண்டது
ஈ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் கூட்டமர்வில் ஜின்னாவின் எதிர்மறை போக்கு

6) தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?
அ) திலகர் ஆ) அன்னிபெசண்ட்
இ) பி.பி. வாடியா ஈ) எச்.எஸ். ஆல்காட்

7) இந்தியாவின் மூவர்ணக்கொடி எப்போது ஏற்றப்பட்டது?
அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930
இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 25, 1931

8) பின்வரும் எந்த ஒன்று சரியாகப் பொருந்தவில்லை?

அ) பஞ்சாப் துணை ஆளுநர் - 1. ரெஜினால்டு டையர்

ஆ) தலித்-பகுஜன் இயக்கம் - 2. டாக்டர் அம்பேத்கார்

இ) சுய மரியாதை இயக்கம் - 3. ஈ.வெ.ரா. பெரியார்

ஈ) சத்தியாகிரக சபை - 4. ரௌலட் சட்டம்

9) கீழ்க்காண்பவர்களில் 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு சிறையில் உயிரிழந்தவர் யார்?

அ) புலின் தாஸ் ஆ) சச்சின் சன்யால்

இ) ஜதீந்திரநாத் தாஸ் ஈ) பிரித்தி வதேதார்

10) முதலாவது பயணிகள் இரயில் 1853ல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?

அ) மதராஸ் - அரக்கோணம் ஆ) பம்பாய் - பூனா

இ) பம்பாய் - தானே ஈ) கொல்கத்தா - ஹீக்ளி

11) கான்பூர் சதி வழக்குக் குறித்த பின்வரும் எந்த கூற்றுகள் சரியானவை?

i) சணல் மற்றும் பருத்தி தொழிற்சாலைகளில் தொழிற்சங்கங்கள் தோன்றின.

ii) இவ்வழக்கில் கம்யூனிஸ்ட்களும் தொழிற்சங்கவாதிகளும் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

iii) இவ்வழக்கு நீதிபதி H.E. ஹோம்ஸ் என்பவரின் முன்பாக விசாரணைக்கு வந்தது.

iv) விசாரணை மற்றும் சிறைத்தண்டனையானது இந்தியாவில் காங்கிரஸ் நடவடிக்கைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

அ) i, ii மற்றும் iii ஆ) i, iii மற்றும் iv

இ) ii, iii மற்றும் iv ஈ) i, ii மற்றும் iv

12) முகலாயர்கள் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?

அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்

13) லண்டன் பிரிவிக் கவுன்சிலில் இடம்பெற்ற முதல் இந்தியர்

அ) ரஹமத்துல்லா சயானி ஆ) சர் சையது அகமது கான்

இ) சையது அமீர் அலி ஈ) பஃருதீன் தயாப்ஜி

14) பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

| பட்டியல்-I | | பட்டியல்-II |
|---|---|---|
| அ) அன்னிபெசண்ட் | - | 1. அலிகார் இயக்கம் |
| ஆ) சையது அகமது கான் | - | 2. தயானந்த சரஸ்வதி |
| இ) கிலாபத் இயக்கம் | - | 3. பிரம்மஞான சபை |
| ஈ) சுத்தி இயக்கம் | - | 4. அலி சகோதரர்கள் |

| | அ | ஆ | இ | ஈ | | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 | ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 4 | 3 | 2 | 1 | ஈ) | 2 | 3 | 4 | 1 |

15) மகாத்மா காந்தியடிகளின் ''செய் அல்லது செத்துமடி'' என எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார்?

அ) சட்டமறுப்பு இயக்கம் ஆ) ஒத்துழையாமை இயக்கம்

இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ) இவை அனைத்தும்

16) இந்திய தேசிய இராணுவபடை வீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர்கள் யார்?

அ) ஜவஹர்லால் நேரு ஆ) மோதிலால் நேரு

இ) இராஜாஜி ஈ) சுபாஷ்சந்திரபோஸ்

17) பிரிட்டிஷார் எந்தக் காலத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்தனர்?
அ) ஆகஸ்ட் 15, 1947 ஆ) ஜனவரி 26, 1950
இ) ஜூன், 1948 ஈ) டிசம்பர், 1949

18) அரசமைப்பு நிர்ணயச் சபையில் குறிக்கோள் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர்
அ) இராஜேந்திர பிரசாத் ஆ) ஜவஹர்லால் நேரு
இ) வல்லபாய் பட்டேல் ஈ) மௌலானா அபுல் கலாம் ஆசாத்

19) அரசமைப்பு எப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது?
அ) ஜனவரி 30, 1949 ஆ) ஆகஸ்ட் 15, 1947
இ) ஜனவரி 30, 1949 ஈ) நவம்பர் 26, 1949

20) மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம் ............
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

## பகுதி - II

**7×2=14**

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**அவற்றில் வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) தேசியம் என்றால் என்ன?
22) பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.
23) கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னனி என்னவாக இருந்தது?
24) சென்னை வாசிகள் சங்கம் பற்றி குறிப்பு எழுதுக.
25) டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.
26) கௌராக்ஷினி சபை பற்றி குறிப்பு வரைக.
27) ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக.
28) கிரிப்ஸ் முன்மொழிவைக் காங்கிரஸ் ஏன் நிராகரித்தது?
29) அரசமைப்பு நிர்ணய சபையின் அமைப்பினை விளக்குக.
30) ஜேவிபி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன?

## பகுதி - III

**7×3=21**

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**அவற்றில் வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) மெக்காலேயின் இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை ஆய்க.
32) வ.உ.சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.
33) தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.
34) ஜவஹர்லால் நேருவைப் பற்றி குறிப்பு எழுதுக.
35) மாற்றத்தை விரும்புபவர்கள் - மாற்றத்தை விரும்பாதவர்கள் வேறுபடுத்துக.
36) 1909 ஆம் ஆண்டின் மின்டோ-மார்லி சீர்த்திருத்தங்களின் முக்கியத்துவத்தைக் கூறுக.
37) 1927 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற முஸ்லீம் லீக் மாநாட்டின் முன்மொழிவுகள் யாவை?
38) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்காத அமைப்புகளின் பெயரை எழுதுக.
39) இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
40) பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 7×5=35

41) அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஆய்க.

(அல்லது)

ஆ) இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக்கொள்கைகள் எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன?

42) அ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

43) அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

(அல்லது)

ஆ) 1919-1939 ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.

44) அ) பொருளாதாரப் பெரும்மந்தம் ஏற்பட்ட போது சமூக பொருளாதார மற்றும் அரசியல் லட்சியங்கள் வெளிப்படுத்துவதில் இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாட்டின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்க.

(அல்லது)

ஆ) ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?

45) அ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை வாதிக்கவும்.

(அல்லது)

ஆ) சுதந்திர போராட்டத்தை இந்திய தேசிய இராணுவ விசாரணை எவ்வாறு தீவிரப்படுத்தியது?

46) அ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக பட்டேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.

(அல்லது)

ஆ) 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகளைக் கண்டறிக.

47) அ) கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.

i) மீரட்
ii) சௌரி சௌரா
iii) தண்டி
iv) வேதாராண்யம்
v) ஜான்சி

(அல்லது)

ஆ) இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் குறிக்கவும்.

@@@@@@